http://www.maalaimalar.com Regd. No. CB/026/2024-2026 RNI. No. 30446/77

மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்

MAALAI MALAR

கோவை 25-2-2025 (செவ்வாய்க்கிழமை) 12 பக்கம் ₹ 5 ★★★ மலர் 48 இதழ் 72

COIMBATORE 25-2-2025 (TUESDAY) 12 PAGES ₹5 VOL: 48 ISSUE: 72



### இ.எஸ்.ஐ. 74-வது தினத்தையொட்டி

# காப்பீடு செய்த நபர்களுக்கு சார்ந்தோருக்கான உதவித்தொகை

கோவை, பிப்.25—

தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகத்தின் சார்பில் கோவை, ஈரோடு, நீலகிரி, திருப்பூர் மாவட்டங்களில் சமூகப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் காப்பீடு பெற்ற தொழிலாளர்களுக்கு இடர் ஏற்படும் காலங்களில் பணம் மற்றும் மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

**கருத்தரங்கு**

அந்த வகையில், இ.எஸ்.ஐயின் 74—வது நிறுவன தினத்தை முன்னிட்டு கொடிசியா வளாகத்தில் இ.எஸ்.ஐ நன்மைகள் குறித்த கருத்தரங்கு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.இதில் காட்டூர் இ.எஸ்.ஐ கிளை அலுவலகத்தின் சார்பில் கீழ்க்கண்ட நிரந்தர உடல் ஊன உதவித்தொகை வழங்கும் ஆணை வழங்கப்பட்டது.

அதன்படி கோவை லூயிசன்ஸ் எஞ்சினியரிங் வொர்ஸ் நிறுவனத்தில் பணியாற்றி, ஊனமடைந்த சந்திரசேகரனுக்கு முதல் நிலுவைத் தவணை உதவி தொகையாக ரூ. 2,9430 வழங்கப்பட்டது. மேலும் அவருக்கு மாதாந்திர உதவித்தொகையாக ரூ.4055 நிர்ணயம் செய்து வழங்கப்படும்.

**சார்ந்தோர் உதவித்தொகை**

இதேபோல் கோவை ஆதவா கார்மென்ட்ஸ் இந்தியா பிரைவேட் நிறுவனத்தில் பணியாற்றி பணியின் போது இறந்த சதிஷ்பால் குடும்பத்துக்கு சார்ந்தோருக்கான முதல் நிலுவைத் தவணை உதவி தொகையாக ரூ.2,14,280 வழங்கப்பட்டது. மாதந்தோறும் அவரது குடும்பத்துக்கு மாதாந்திர தொகையாக ரூ.12,961 நிர்ணயம் செய்து வழங்கப்படும். இதேபோல் நாகேந்திரன் பாலன் என்பவரது குடும்பத்துக்கும், செந்தில் பழனியப்பன் குடும்பத்தினருக்கும் சார்ந்தோருக்கான தொகை வழங்கப்பட்டது.

இதில் இ.எஸ்.ஐ சார் மண்டல அலுவலகத்தின் துணை இயக்குனர் கார்த்திகேயன், உதவி இயக்குனர் பெருமாள், இ.எஸ்.ஐ காட்டூர் கிளை மேலாளர் ரோஷன் மற்றும் கொடிசியாவின் இணை செயலாளர் சிவகுமார், பொது செயலாலர் ரமேஷ் பாபு ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இஎஸ்ஐசி கருத்தரங்கு, விழிப்புணர்வு நிகழ்ச்சியில்

# பணியின் போது உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு உதவி தொகை




கோவை, பிப். 25: கோவை இஎஸ்ஐசி சார் மண்டல அலுவலகத்தால் இஎஸ்ஐசி நிறுவன தினத்தை முன்னிட்டு நேற்று கொடிசியா வளாகத்தில் இஎஸ்ஐசி நன்மைகள் குறித்த கருத்தரங்கு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இதில் உதவித்தொகை மற்றும் நிரந்தர ஊன உதவித்தொகைக்கான ஆணை வழங்கப்பட்டது. அதன் படி கோவையில் தனியார் நிறுவனத்தில் பணியின் போது உயிரிழந்த சதிஷ்பால் என்பவரின் குடும்பத்தினருக்கு முதல் நிலுவைத்தவணை உதவித்தொகையாக ரூ.2 லட்சத்து 14 ஆயிரத்து 280 வழங்கப்பட்டது. மேலும், மாதந்தோறும் சதிஷ்பால் குடும்பத்தினருக்கு மொத்த மாதாந்திர உதவித்தொகையாக ரூ.12,961 நிர்ணயம் செய்து வழங்கப்பட உள்ளது.

அதேபோல தனியார் செக்கியூரிடி செர்வீஸ் நிறுவனத்தின் கீழ் பணியாற்றி, பணியின் போது உயிரிழந்த நாகேந்திரன் பாலன் குடும்பத்தினருக்கு உதவித்தொகையாக ரூ.67 ஆயிரத்து 307 வழங்கப்பட்டது. மேலும், மாதந்தோறும் நாகேந்திரன் பாலன் குடும்பத்தினருக்கு மொத்த மாதாந்திர உதவித்தொகையாக ரூ.4,380 நிர்ணயம் செய்து வழங்கப்பட உள்ளது.

கிணத்துக்கடவில் தனியார் கார் விற்பனை மையத்தில் பாதுகாப்பு துறையில் பணியின்போது உயிரிழந்த செந்தில் பழனியப்பன் குடும்பத்தினருக்கு முதல் நிலுவைத்தவணை உதவித்தொகையாக ரூ. 53 ஆயிரத்து 276 வழங்கப்பட்டது. அவரது குடும்பத்தினருக்கு மாதாந்திர உதவித்தொகையாக ரூ.6,660 நிர்ணயம் செய்து வழங்கப்படுகிறது.

கோவை தனியார் இன்ஜினியரிங் வொர்க்ஸ் நிறுவ... ஏற்பட்ட விபத்தால் வலது கை விரல்களில் நிரந்தர ஊனமுற்ற சந்திரசேகரனுக்கு நிரந்தர ஊன உதவித்தொகைக்கான முதல் நிலுவைத்தவணை உதவித்தொகையாக ரூ.29 ஆயிரத்து 430 வழங்கப்பட்டது. மேலும், மாதந்தோறும் அவருக்கு மொத்த மாதாந்திர உதவித்தொகையாக ரூ.3,924 நிர்ணயம் செய்யப்பட்டது.

நிகழ்ச்சியில் இஎஸ்ஐ சார் மண்டல அலுவலகத்தின் துணை இயக்குனர் கார்த்திகேயன், உதவி இயக்குனர் பெருமாள், கொடிசியாவின் இணை செயலாளர் சிவகுமார், கொடிசியா வர்த்தக கண்காட்சி வளாகத்தின் பொது செயலாளர் ரமேஷ் பாபு மற்றும் இதர அதிகாரிகள்